*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# இந்து சமுத்திர வணிக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் நாணயங்களும் கல்வெட்டுக்களும்

**அனுசூயா சேனாதிராஜா[1] & எச்.எப். பிர்தௌஸியா[2]**
[1&2]சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Correspondence: anuzsiya@gmail.com

**கட்டுரைச் சுருக்கம்**

இந்து சமுத்திர வர்த்தகமானது பல ஆயிரக்கணக்கான வருட வர்த்தக வரலாற்றைக் கொண்டதாகும். அவ்வர்த்தக வரலாற்றைக் கட்டியெழுப்புவதானால் இலக்கிய மூலாதா ரங்களில் மட்டும் தங்கியிருப்பது சாத்தியமற்றதாகும். ஆகவே தொல்பொருள் ஆதாரங்களது வகிபங்கு இதுதொடர்பில் அளப்பரியது. ஆகவே இவ்வாய்வானது இந்து சமுத்திர வர்த்தக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் நாணயங்கள் மற்றும் கல்வெட்டுக் களால் ஆற்றப்படும் பங்களிப்பை எடுத்துக்காட்டுவதை நோக்காகக் கொண்ட மைந்துள்ளது. இதற்காக இவ்வாய்வானது இரண்டாந்தர மூலாதாரங்களைப் பிரதானமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்வெட்டுக்களும் நாணயங்களும் வர்த்தக வரலாற்றை வேறுபட்ட கோணங்களில் இருந்து அணுகி விரிவான தகவல்கள் மூலம் வரலாற்றைக் கட்டியெழுப்ப வாய்ப்பளிக்கின்றமையும் இந்து சமுத்திர வர்த்தக வரலாற்றில் இம்மூலாதாரங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமைக்கான காரணங்களையும் இவ்வாய்வூடாக அறியமுடிகின்றது.

**பிரதான சொற்கள்:** இந்து சமுத்திரம், வணிக வரலாறு, நாணயங்கள், கல்வெட்டுக்கள்

## 1. அறிமுகம்

வணிகம் எனப்படுவது, ஒருவருக்கொருவர் தம்முள் அறிமுகம் உடைய மக்களுக்குள்ளேயோ அல்லது பண்பாட்டுக் கலப்பில்லாத மக்களுக்குள்ளேயோ இணக்க அடிப்படையில் பொருட்களை மாற்றிக் கொள்வதாகும். ஆகவே வர்த்தக நடவடிக்கைகள், குறித்த ஒரு நாட்டிற்குள்ளாலோ அல்லது பல நாடுகளுக்கு மத்தியில் சர்வதேச ரீதியாகவோ இடம்பெறலாம். அவ்வாறு பண்டைக் காலத்தில் இடம்பெற்ற இன்னோரன்ன வர்த்தக நடவடிக்கைகள் பற்றி வேதங்கள், வம்சக் கதைகள், ஜாதகக் கதைகள், பேரரசர்கள் பேரரசுகளது வரலாறுகளை கூறும் நூல்கள், வெளிநாட்டார் குறிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு இலக்கிய மூலாதாரங்கள் ஊடாக தகவல் பெற முடிகின்றது. வெளிநாட்டார் குறிப்புக்கள் எனும் போது ஹெரடோடஸ், பிளினி, ஸ்ட்ராபோ, தொலமி, சுலைமான் தாஜிர் போன்றோரது குறிப்புக்கள் குறிப்பிடத்தக்கன. என்றபோதிலும் இலக்கிய மூலாதாரங் களுக்கென பொதுவாக உள்ள குறைப்பாடுகள் அவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு வரலாற்றையும் சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது. இலக்கிய மூலாதாரங்கள் இடைநிறுத்திய வரலாறுகளை தொடரவும், கூறப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும் தொல்பொருள் மூலாதாரங்களது தேவை இன்றியமையாததாகும்.

தரை நிலத்தடியிலிருந்தும் தண்ணீர் நிலத்தடியிலிருந்தும் அகழ்வாய்வுகளில் கண்டறியப் படுவனவாக தொல்பொருள் மூலாதாரங்கள் விளங்குகின்றன. 'பிணங்கள் பொய் பேசாது' என்பதற்கு ஏற்ப இலக்கிய மூலாதாரங்களது குறைபோக்கி அவற்றில் வடித்துக்கூற முடியாத தகவல்களைக் கூறுவனவாகவும் இவை உள்ளன. அத்தோடு உயர்வு நவிற்சிகளுடனான இலக்கிய நயம் பேசாதும் உண்மையை மெய்ப்படக் கூறுவனவாகவும் விளங்குகின்றன. அத்தகைய தொல்பொருள் மூலாதாரங்களாக நாணயங்கள், மட்பாண்ட சிதைவுகள், கட்டட சிதைவுகள், முத்திரைகள், ஓவியங்கள், சிற்பங்கள், சிலைகள், அலங்காரப் பொருட்கள், எலும்புக்கூடுகள், ஆயுதப் பொருட்கள், உலோகத் தயாரிப்புக்கள், கல்வெட்டுக்கள் எனப் பட்டியல் நீண்டுகொண்டு செல்வதைக் காணலாம்.

இவ்வாறு நோக்கும் போது வணிக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் இலக்கிய மூலாதாரங்களிலும் பார்க்க தொல்பொருள் மூலாதாரங்கள் மூலமான பங்களிப்பு ஒருபடி மேலிருக்கின்றமை தெளிவாகின்றது. வணிக வரலாறு என்பது அதிலும் குறிப்பாக கண்டம் விட்டு கண்டம் தாண்டிய வணிக வரலாறு என்பது ஐரோப்பிய மறுமலர்ச்சியுடனான வஸ்கொடகாமாவின்

நாடுகாண் பயணங்களுடன் ஆரம்பித்தவொன்றல்ல. இந்திய இலக்கிய மூலாதாரங்கள் கீழைத்தேய வர்த்தக வரலாற்றைப் பற்றிய தகவல்களைப் பெறக்கூடிய முக்கிய சான்றுகளாகும். அவை ஆரியரது வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக தகவல்களைப் பெற உதவுகின்றன. எவ்வாறாயினும் இலக்கிய மூலாதாரங்களை மட்டும் கவனத்திலெடுத்து வணிக வரலாற்றை எழுதும்போது அவ்வரலாறானது வேரற்ற மரநடுகையாக அமையப் பெற்றுவிடும். காரணம் தொல்பொருள் ஆதாரங்கள், குறித்த ஒவ்வொரு துறையிலான ஆய்வுகளையும் வெவ்வேறு திசைகளில் இருந்து ஆய்வு செய்யவும் ஆய்வில் புதிய பல செல்நெறிகளை உள்ளடக்கவும் வல்லன.

இலக்கிய மூலாதாரங்கள் கிடைக்கப்பெறாத வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலும் மனித இனக் குழுக்கள் தம்மிடையேயும் ஏனைய குழுவினருடனும் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்துள்ளனர். ஹரப்பா நாகரிகம் போன்றன அண்டைய நாகரிகமான மெசொபதேமிய நாகரிகத்தவருடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தமையை எமக்கு எடுத்துச் சொல்வனவாக தொல்பொருள் மூலாதாரங்களே நிலவுகின்றன. குறித்த கால நிகழ்வுகள், வாழ்க்கைப் போக்குகள் தொடர்பாக தொல்பொருட்கள் கூற முயல்வதை, மறைகாண் புகைப்படக் கருவிகளில் காட்சிகளை மட்டும்கொண்டு என்ன நடந்திருக்கும் என யூகித்தறிவது போல நடந்த வரலாற்றைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

1980கள் முதல் இந்து சமுத்திர வர்த்தக வரலாற்றில் வர்த்தகர்களது செயற்பாடுகள் தொடர்பாக அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டுவருவதைக் காணலாம் (Karashima, 2002). பெருமளவிலான ஆய்வுகள் ஐரோப்பியரது இந்து சமுத்திர வருகை முதலான வரலாற்றையே ஆய்வு செய்கின்றன. ஆயினும் கி.மு.1-3ஆம் நூற்றாண்டு வரையிலான உரோம வர்த்தகம் தவிர்ந்த ஏனைய வர்த்தக வரலாறுகள் பெருமளவு இன்னும் ஆய்வு இடைவெளியைக் கொண்டவையாகவே நிலவுகின்றன.

பீனீஷியர்கள், பண்டைக்கால நாகரிகத்தவர்களான ஹரப்பா, மெசொபொதேமிய, எகிப்திய நாகரிகத்தவர்களது வர்த்தக நடவடிக்கைகள் போன்றன சமுத்திரங்களிலும் தரை நிலங்களிலும் புதையுண்டு போயுள்ளன. எனவே அரசுகள் தத்தம் தொல்பொருள் திணைக்களங்களூடாக தொல்பொருளியலாளர்களையும் நிபுணத்துவமுடைய சுழியோடிகளையும் கொண்டு நீரிலும் தரையிலும் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டு வணிக வரலாற்றைக் கட்டியெழுப்ப விளைகின்றனர்.

இவ்வாறாக தொல்பொருள் ஆய்வுகளில் கிடைக்கப்பெறும் இன்னோரன்ன சான்றுகள் அக்கால வர்த்தகத் தொடர்புகள், வர்த்தகப் பொருட்கள், வர்த்தக மார்க்கங்கள், பயன்படுத்திய போக்குவரத்து சாதனங்கள், கொடுக்கல்-வாங்கல் முறைகள், வணிகக் குடியிருப்புக்கள், குறித்தப் பிரதேசங்களில் தனித்துவமாய் விளங்கிய பொருட்கள் போன்ற பல தகவல்களை அளிக்கின்றன. அவ்வாறான தொல்பொருட்களுள் நாணயங்களும் கல்வெட்டுக்களும் வணிக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை அறிவதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வின் நோக்கமும் முறையியலும்

பொதுவாக வரலாறுகளைக் கட்டியெழுப்பும் மூலாதாரங்கள் என்றவகையில் தொல்பொருட்களது பங்களிப்பு அளப்பரியது. ஆகவே வர்த்தக வரலாறு என நோக்கும் போது அதுசார்ந்த பல்வேறு தகவல்களைத் தருவதில் தொல்பொருட்களுள் முக்கிய இடம் வகிப்பவன நாணயங்களும் கல்வெட்டுக்களும் எத்தகைய வகிபங்கைக் கொண்டுள்ளன என்பதையும், அவை எவ்வாறு வர்த்தகம் சார்ந்த பல்வேறு தகவல்களை வழங்கக் கூடியன என்பதையும் எடுத்துக்காட்டுவது இவ்வாய்வின் நோக்கமாகும். அத்தோடு அம்மூலாதாரங்கள் வர்த்தக வரலாறு சார்ந்த எவ்வாறான ஆய்வு இடைவெளிகளையும் ஆய்வுத் தெளிவுகளையும் எடுத்துரைக்கின்றன என்பதையும் நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரலாற்று ரீதியிலான பண்புசார் ஆய்வான இது இரண்டாம் தர மூலாதாரங்களைப் பிரதானமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

### 3. கண்டுபிடிக்கப்படும் நாணயங்களும் வர்த்தக வரலாறும்

வணிக வரலாற்றில் நாணயங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. அவை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வர்த்தகத்தின் செழுமை நிலைமையினையும் அதன் விரிவாக்கத்தையும் அறிந்திட வழிவகுக்கின்றன. அவை குறித்தவொரு காலத்தின் அரசியல், பொருளாதார நிலைமையினை வெளிச்சம்போட்டுக் காட்டவல்லன. வர்த்தக வரலாறென நோக்கும்போது, குறிப்பிட்ட வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்ற நாடுகள், அவற்றிடையிலான வர்த்தக உறவின் நிலைபேற்றுத் தன்மை, அந்நாடுகளது செல்வ நிலைமை, ஆட்சி செய்த மன்னர்கள், முக்கியம்பெற்ற வர்த்தகப் பண்டங்கள் எனப் பலதையும் எடுத்துரைக்கக் கூடியன.

எனினும் இந்நாணயங்கள் ஆரம்பத்தில் வரலாற்றைக் கட்டியெழுப்பும் மூலாதாரங்களாகக் கொள்ளப்படவில்லை. அவை செல்வ நோக்குக் கொண்டு புதையல்களாக இழக்கப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகமாகும். இந்தியாவில் தமிழ்நாடு போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட உரோம நாணயங்கள் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன (வேங்கடசாமி,1978). இவை விவசாயிகள் நிலத்தை உழுதலின் போது அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தியாவில் இவை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்தான் வரலாற்று மூலாதாரங்கள் எனும் அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டுள்ளன. அதற்கு முன்னர் இவற்றின் பெறுமதி கருதி இழக்கப்பட்டவை பெரும்பாலானவை ஆகும்.

இலங்கையைப் பொருத்த வரையில் இந்திய, அராபிய, பாரசீக, சீன நாணயங்கள் உள்ளிட்டவை கிடைக்கப்பெறுகின்றன (Silva,1997). தமிழகம் - இலங்கை இடையிலான நெருக்கமான உறவானது வரலாற்றுத் தொன்மையுடையது. வட இலங்கைப் பகுதிகளில் கிடைக்கப்பெற்ற நாணயங்களுள் அனேகமானவை சங்க கால பாண்டிய வம்சத்திற்குரியனவாகும். இதற்கு பாண்டிய நாடானது இலங்கைக்கு மிக அண்மையில் இருப்பது ஒரு காரணியாகும். போல் பீரிஸ் அவர்களால் கந்தரோடையில் கண்டறியப்பட்ட நாணயங்கள் பாண்டிய வம்சத்தவருக்குரியதாகும். அத்தோடு பூநகரியில் கிடைக்கப்பெற்ற 4 வகையான நாணயங்களும் பாண்டிய வம்சத்தவருக்குரியது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதேபோல இலங்கையின் அனுராதபுரம், மன்னார் போன்ற இன்னோரன்ன இடங்களில் உரோம, பாரசீக, சீன, அராபிய நாணயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன (Silva,1997). இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் குறிப்பாக அராபிய பாரசீக நாணயங்கள் இலங்கையுடனான அந்நாடுகளது வர்த்தக உறவின் தொன்மையை எடுத்துச் சொல்வனவாகவும் இங்குவாழ் முஸ்லிம்களது குடியேற்றங்கள் உட்பட இருப்பை உறுதிப்படுத்த உதவும் ஆதாரங்களாகவும் கொள்ளப்படுகின்றன.

இலங்கை நாணயங்கள் உள்நாட்டில் கிடைக்கப்பெறும் அளவில் வெளிநாடுகளில் எமக்குக் கிடைக்கப்பெறுவதில்லை. பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட நாணயங்கள் குறிப்பாக இலங்கை வர்த்தக மையத்தளங்களில் கிடைக்கப்பெறுகின்ற போதும் அவை இலங்கைக்கு வெளியே அடையாளம் காணப்படவில்லை. இலங்கைக்கு வெளியில் கண்டறியப்பட்ட இலங்கை நாணயங்களுள் தமிழ்நாட்டில் சேர அரசின் இரண்டாவது தலைநகரான கரூரில் கிடைக்கப்பெற்ற சிங்க உருவுடைய லட்சுமி நாணயங்களைக் குறிப்பிடலாம் (Pushparatnam, 2002). இந்நாணயங்கள் இலங்கை-தமிழ்நாடு என்பவற்றிடையிலான வர்த்தக உறவினை உறுதிப்படுத்தத்தக்க சான்றுகளாகும்.

ஈழவூரில் கிடைக்கப்பெற்ற செப்பு நாணயத்தில் முன்பகுதியானது குதிரையும் மறுபுறம் யானை உருவமும் கொண்டு இலங்கைக்கேயுரிய தனித்துவத்துடன் காணப்படுகின்றது. இதனூடாக வரலாற்றாசிரியர்கள் இலங்கையில் இறக்குமதி வர்த்தகத்தில் குதிரையும் ஏற்றுமதி வர்த்தகத்தில் யானையும் பிரதானமாக விளங்கியுள்ளது எனக் கருதுகின்றனர் (Pushparatnam,2002). இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் தென்னிந்தியா முக்கிய இடம் பெற்றிருந்ததாலும் அவற்றுக்கிடையிலான வர்த்தக உறவானது முக்கியத்துவம் பெற்றிருந்ததனாலும் அதனை ஒரு பிரதான அங்கமாகக் கொண்டு தமது நாணயங்களில் பொறித்திருக்கலாம்.

உமையா அரச பரம்பரையினருடனான அதாவது மத்தியகிழக்காசிய மற்றும் மேற்காசியாவுடனான இலங்கையின் வர்த்தக உறவை உறுதிப்படுத்தத்தக்க சிறந்த நாணய சான்றாக உமையா கலீபா வலீத் இப்னு அப்துல் மலிக்கினுடைய ஆட்சிக் காலப்பிரிவிற்குட்பட்ட ஒரு நாணயம் முத்துராஜவலயில் கிடைக்கப்பெற்றுள்ளது (தசநாயக்க, 2021). இக்கலீபாவினது ஆட்சிக் காலப்பகுதியாக கி.பி.705-715 வரையான காலம் எனக் கணிக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்க

விடயமாகும். இதனை முஸ்லிம் உலகுடனான இலங்கையின் வர்த்தக உறவின் தொன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் முன்வைக்கலாம்.

அவ்வாறே தமிழ் நாட்டில் மதுரை, பொள்ளாச்சி, கரூர், வெள்ளலூர், கொங்கு போன்ற இடங்களில் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Pushparatnam, 2002). மதுரை, கரூர் போன்ற சங்ககால தலைநகரங்களில் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையானது வர்த்தக உறவுகளின் தொன்மையினை எடுத்துக்காட்டுகின்றன.

இந்நாணயங்கள் கிடைக்கப்பெறும் நிலைமையினை வைத்தும் எமக்கு வரலாற்றைக் கட்டியெழுப்ப முடிகின்றது. அதாவது கள்ளிக்கோட்டையில் மரத்தினடியில் புதைக்கப்பட்டதற்கான அறிகுறிகள் உடைய ஒரு மூட்டை தங்க ரோம நாயணங்கள் கிடைத்துள்ளன. இவை உரோமர் அடுத்த முறை தாம் வரும் போது எடுத்துக்கொள்ளும் நோக்கில் பாதுகாப்புக் கருதி புதைத்துவிட்டுச் சென்றிருப்பர் என்பதாக வரலாற்றாசிரியர்கள் ஊகிக்கின்றனர். வெள்ளலூரில் கிடைக்கப்பெற்ற சிறு மண்குடம் ஒன்றில் *121* வெள்ளி நாணயங்கள் இருந்தன (வேங்கடசாமி,*1978*). அவற்றுள் சுமார் *10* நாணயங்கள் தூய்மையாகவும் ஏனையவை மண் ஒட்டிய நிலையிலும் இருந்துள்ளன. ஆயினும் அவை யாவும் பளபளப்புடன் நேர்த்தியாகவும் இருந்துள்ளன. இவற்றை நோக்கும் போது அவை தேயாமலும் சுத்தமாகவும் இருப்பதனால் அவை வெகுநாள் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் அல்ல என்பதை அறிய முடிகின்றது. ஆகவே உள்நாட்டு அரசியல் குழப்ப நிலைமைகள் அல்லது புரட்சி நிலைமைகளினால் பாதுகாப்பிற்காக புதைத்து வைக்கப்பட்ட நாணயங்களாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. இதுபோன்று நாணயங்கள் தொல்பொருள் ஆய்வுகளின் போது எந்நிலையில் கிடைக்கின்றன என்பதைக்கொண்டும் வரலாறானது கட்டியெழுப்பப்படுகின்றது.

மேலும் இந்நாணயங்கள் கிடைக்கப்பெறும் இடங்களது ஒழுங்குவரிசைக்கேற்ப வர்த்தக மார்க்கங்களையும் அடையாளம் காண முடிகின்றது. யவனர்கள் என்பதாக பண்டைக்கால மக்கள் அழைத்த கிரேக்கர்கள், ரோமர்கள் தமிழ்நாடு, மலபார் எனும் இடங்களில் குடியேற்றங்களை அமைத்திருந்தனர். இவர்கள் மலபார் முசிரியிலிருந்து புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டிணம் வரையில் நிலவழிப்பாதையை பயன்படுத்தினார்கள். இப்பாதையானது வர்த்தக நோக்கில் பயன்படுத்தப்பட்டமைக்கு பொள்ளாச்சி, வெள்ளலூர், கருவூர், புதுக்கோட்டை, கலியாம்புத்தூர் நெடுகிலும் ரோம நாணயங்கள் கிடைக்கப்பெறுவதிலிருந்து அறியலாம். அத்தோடு இப்பாதையானது கொற்கை மற்றும் புகார் துறைமுகங்களுக்கு இடையில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படுத்தியுள்ளனர் என உறுதிபடக் கூறலாம். எனவே நாணயங்கள் கிடைக்கப்பெறும் இடப்பகுதிகளைக் கொண்டும் வணிக வரலாறானது கட்டியெழுப்பப்படுகின்றமை தெளிவாகின்றது.

ரோமப் பேரரசன் அகஸ்டஸ் காலத்தில் ரோமிற்கு அனுப்பப்பட்ட இந்தியத் தூதுவன் பாண்டிய அரசனால் அனுப்பப்பட்டிருக்கலாம் என தென்னிந்தியப் பகுதிகளில் கிடைக்கப்பெற்ற நாணயங்களை ஆய்வு செய்த கால்டுவெல் கருதுகின்றார் (வேங்கடசாமி,1978). இதனூடாக இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் வர்த்தக வரலாற்றுத் தகவல்களை நாணய சான்றாதாரங்களூடாக மேலும் சான்றுறுதிப்படுத்த முடிகின்றது.

வெவ்வேறு காலங்களில் கிடைக்கப்பெறும் பல்வேறு நாடுகளது நாணயங்களை வைத்துக்கொண்டு அந்நாடுகளது பொருளாதார நிலைமையினை அறிந்துகொள்ள முடிகின்றது. உதாரணமாக இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ள வெவ்வேறு காலப்பகுதிகளுக்குரிய உரோம நாணய ஆதாரங்களை வைத்து நோக்கும் போது, இந்தியாவுடனான அவர்களது வர்த்தகத்தில் முதலில் வெள்ளி நாணயங்களையும் தொடர்ந்து செப்பு நாணயங்களையும் பயன்படுத்தியுள்ளதுடன் அதன் பின்னர் தங்க நாணயங்களை உபயோகித்துள்ளனர். இவற்றுள் தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் பெரும்பாலும் முதல் ஐந்து ரோமப் பேரரசர்களது காலத்தவையாக உள்ளன. அதாவது அகஸ்டஸ், டைபீரியஸ், கலிகுலா, கிளாடியஸ், நீரோ காலத்தவையாகும். ஆயினும் நீரோ மன்னனது ஆட்சியின் முதல் ஒரு வருட காலத்தின் பின்னர் வெளியிட்ட வெள்ளி நாணயங்களது எடையும் தரமும் குறைந்ததனால் இந்திய மக்கள் மத்தியில் ரோம நாணயங்களின் செல்வாக்கு இழந்துள்ளது. ஆயினும் பிற்பட்ட காலத்தில் ரோமர் தங்க நாணயங்களை பயன்படுத்தியுள்ளனர்.

தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறும் நாணய ஆதாரங்களைக்கொண்டு வணிக நடவடிக்கைகள் தொடர்பாக கொங்கு நாட்டின் வரலாறு எனும் நூலில் பின்வரும் நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

1. புதையல்களில் இருந்த நாணயங்கள் புதிதாக இருந்தமையை வைத்து அவை (செலாவணியாகாத) புதிய நாணயங்களாக இனம் காணலாம்.
2. நாணயங்கள் பெரும்பாலும் கடற்கரைத் துறைமுகங்கள் அல்லது துறைமுகப் பட்டினங்களில் அல்லாது உள்நாட்டுப் பகுதிகளிலேயே கிடைக்கப்பட்டுள்ளன.
3. கிடைக்கப்பெறும் இன்னோரன்ன நாணயங்கள் சிறந்த வேலைப்பாடுகளுடன் செம்பொன், வெள்ளி போன்றவற்றாலும் செய்யப்பட்டிருந்தன.
4. புதையல்கள் பெருமளவில் கிடைக்கப்பெற்றன. இது அக்கால வர்த்தக செழிப்பு நிலைமைக்கு எடுத்துக்காட்டாகும்.
5. சில நாணயங்கள் ஆபரணங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாணயங்களில் இடப்பட்டுள்ள துளைகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.
6. கி.பி.10ஆம் நூற்றாண்டின் முன்னர் கிடைக்கப்பெற்ற நாணயங்கள் யாவும் உரோமானிய நாணயங்களாக உள்ளமை உரோமானியருடனான இந்தியாவின் வர்த்தகத்தை எடுத்துரைக்கப் போதிய சான்றாகும்.

இவ்வாறான தகவல்கள் ஊடாக வர்த்தக வரலாற்றை இன்னோரன்ன கோணங்களில் இருந்து கட்டியெழுப்ப முடிகின்றது. உதாரணமாக உரோமருடனான இந்திய வர்த்தகத்தை பற்றி ஆய்வு செய்யும்பட்சத்தில் கி.பி.10ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ்நாட்டுப் பகுதியில் உரோம நாணயங்கள் செலாவணியில் நிலைத்துள்ளன. அத்தோடு உரோமரது நாணய செல்வாக்கை நோக்கும் போது தென்னிந்தியாவில் உரோமரது குடியேற்றப் பகுதியொன்று நிலைப்பெற்றிருக்க வேண்டும் என்பது சார்ந்து சிந்திக்க முடிகின்றது.

இவ்வாறாக நோக்கும் போது நாணய சான்றாதாரங்கள் ஊடாக குடியேற்றங்கள் உறுதிப்படுத்த முடிவதுடன் இருவேறு நாடுகளிடையிலான வர்த்தக உறவின் மாதிரியையும் அதன் தொன்மையையும் எடுத்துக்காட்ட முடிகின்றது. அத்தோடு, ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகப் பொருட்கள் தொடர்பாக மட்டுமன்றி அவ்வர்த்தகப் பொருட்கள் குறிப்பிட்ட நாடுகளில் தனித்துவக் கேள்வியுடையவையாக இருந்தமையை அடையாளப்படுத்தவும் இயலுமாகின்றது. மேலும் இந்நாணயங்கள் தொல்லியல் ஆய்வுகளின்போது எவ்வாறான நிலைமைகளில் கிடைக்கப்பெறுகின்றன என்பதை வைத்து அவற்றின் பின்புலத்தை வரலாறாகக் கட்டியெழுப்ப முடிகின்றது. அவ்வாறே, அவை கிடைக்கப்பெறும் ஒழுங்கை வைத்து அக்கால வர்த்தகப் பாதைகளை கட்டமைக்க முடிகின்றது. இதுபோன்றே நாணயங்கள் உரித்தாகும் காலப்பகுதியை அடிப்படையாகக்கொண்டு அவை உரித்தாகும் நாடுகள், பேரரசுகளது பொருளாதார நிலைமையையும் எடைபோட முடிகின்றது. மேலும். இலக்கிய மூலாதாரங்களில் பேசப்படும் சில தகவல்கள் நாணய சான்றுகள் மூலமாக மேலும் உறுதிப்படுத்தியும் வர்த்தக வரலாற்றைக் கட்டியெழுப்ப முடிகின்றது.

## 4. வர்த்தக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் கல்வெட்டுக்கள்

கல்வெட்டுக்கள் வரலாற்று மூலாதாரங்களில் முக்கிய இடம்வகிப்பனவாகும். காலத்திற்குக் காலம் திரிபுகளுக்குட்படாது மிகைப்படுத்தலன்றி மிகவும் சுருக்கமாக தகவல் தர வல்லனவாக உள்ளன. இவை வர்த்தக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்குவகிக்கின்றன. குறித்த நாடுகளுடனான வர்த்தகமானது எந்தளவு காலம் நிலைப்பெற்றுள்ளது என்பதுடன் அவ்வர்த்தகத்தின் மாதிரியினை பற்றியும் தகவல் தருகின்றன. அத்தோடு வர்த்தகத்தோடு தொடர்புடைய சட்ட ஒழுங்குகள், தண்டனைகள், சுங்க வரிவிதிப்புகள், சந்தை விபரங்கள் என இன்னோரன்ன விடயங்களை எடுத்துச் சொல்கின்றன.

மேலும் வர்த்தகர்கள் வர்த்தகம் சார்ந்த துறைகளில் பெற்றிருந்த பதவிகள், பொறுப்புக்கள், அவர்களுக்குக் கிடைத்த சமூக அந்தஸ்து போன்றவற்றையும் கல்வெட்டுக்களில் காணலாம். அநுராதபுரத்தில் கிடைக்கப்பெற்ற கி.மு.3ஆம், 2ஆம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட பிராமிக் கல்வெட்டொன்றில் *'சள கணேய'* எனும் சோழ வணிகன் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்பவன் என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மகா பராக்கிரமபாகுவின் தமிழ் மொழியிலான நைனாதீவுக் கல்வெட்டில் துறைமுகங்களை அடையும் கப்பல்களுக்கு வழங்கப்படும் காப்பீடுகள், சலுகைகள் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்க விடயமாகும். இக்கல்வெட்டில் மன்னன் வெளிநாட்டு வர்த்தகர்களை இலங்கைத் துறைமுகங்களுக்கு வரக் கோரியுள்ளதுடன் அவர்களது பாதுகாப்பு தொடர்பில் உத்தரவாதமும் அளித்துள்ளான். அத்தோடு யானை, குதிரைகளை ஏற்றி வரும் கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களுக்கருகில் மூழ்கி விபத்துக்குள்ளாகும் பட்சத்தில்

அதிலிருந்த பொருட்களுள் நான்கில் ஒரு பகுதியை மட்டும் திரைச்செரிக்குப் பெற்றுக்கொள்ளப்படுவதாக சட்டம் வகுத்திருந்துள்ளதுடன், ஏனைய வர்த்தகப் பொருட்களை சுமந்துவரும் கப்பல்களது வர்த்தகப் பொருட்களது அரைப் பங்கை மீள செலுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது (தசநாயக்க, 2021). இவற்றினூடாக அரசர்கள் இந்து சமுத்திர வர்த்தகத்தில் காட்டிய அக்கறை, அவற்றை முறையாக பேணிட எடுத்த முயற்சிகள், அரசர்கள் வெளிநாட்டு வர்த்தகர்களைக் கவர முன்னெடுத்த நடவடிக்கைகள் எனப் பலதையும் அறிய முடிகின்றது.

புராதன நாகரிகங்களது கால வர்த்தக சான்றுகளை எடுத்து நோக்கும்போது, மெசொபொதேமிய கல்வெட்டுக்களில் பல புதிய தகவல்களை அறிய முடிகின்றது. அக்காலத்தில் ஹரப்பா நகரானது '*மெழுஹா*' என்பதாக அறியப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 4000-4500 ஆண்டுகள் முற்பட்ட சுமேரியக் கல்வெட்டுக்களில் அக்கால வர்த்தகம் தொடர்பான தகவல்களை அறிய முடிகின்றது. ஹரப்பா நாகரிகத்திற்கும் மெசொபொதேமிய நாகரிகத்திற்கும் இடைப்பட்ட வர்த்தக மார்க்கமாக உள்ள *மகான்-மெழுஹா* நகரங்கள் இடையில் வர்த்தகம் இடம்பெற்றமை பற்றியும் *மகான்* விலை உயர்ந்த மரக்கட்டைகளை ஏற்றுமதி செய்ததாயும் *மெழுஹா*விலிருந்து பொன், முத்து, விலையுயர் கற்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாயும் இக்கல்வெட்டுக்கள் தகவல் தருகின்றன (சாமி,2005). இவற்றினூடாக இந்து சமுத்திர வர்த்தக வரலாற்றின் தொன்மையையும் நாகரிகங்களுக்கு இடையில் நிலவிய வர்த்தக உறவுநிலை தொடர்பாகவும் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட வர்த்தகப் பண்டங்கள் தொடர்பாகவும் விபரம் பெற முடிகின்றது.

மேலும் மெசொபொதேமிய கல்வெட்டுக்களில் ஹரப்பாவின் பலகை வர்த்தகமானது தில்முன் வழியாக இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. அவ்வாறே மெசொபொதேமியாவில் *ஊர்* (Ur) பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டானது செம்மறியாட்டுப் பண்ணை பற்றி குறிப்பிடுகின்றது (சாமி,2005). இக்குறிப்பானது கம்பளித் துணிக்கு பிரபல்யம் பெற்றிருந்த மெசெபதோமியாவில் *ஊர்* பிரதேசம் உற்பத்தி நிலையமாக இவ்வர்த்தகத்திற்கு ஆற்றிய பங்களிப்பினை இனங்காணலாம். அதாவது 350000 செம்மறியாடுகள் இங்கிருந்ததாகவும் செம்மறியாடுகளை பராமரிக்க 6000 பேர் அரச சேவையாளர்களாக ஈடுபடுத்தப்பட்டதாயும் அக்கல்வெட்டு தகவல் தருகின்றது. அவ்வாறே மெசொபொதேமியாவில் Larsa மன்னனது கல்வெட்டில் விவசாயத்திற்குத் தேவையான பொருட்கள், வீட்டுப் பொருட்கள், பீடுமன், Myrobalan எனும் மூலிகை வகையொன்று என்பன லோதால், ரன்பூர், தடாங்கர் போன்ற பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டமை பற்றி காணலாம். அவ்வாறே மெழுஹாவிலிருந்து முத்து கொண்டுவரப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டள்ளது. இவைதவிர 3ஆம் '*Hh*' மன்னனது கல்வெட்டில் மெழுஹாவிலிருந்து ஈச்சைப்பழம் கொண்டுவரப்பட்டதாக காணப்படவதுடன் 11ஆம் '*Hh*' மன்னனது கல்வெட்டில் மெழுஹாவிலிருந்து செம்பு கொண்டுவரப்பட்டமைக்கு ஆதாரம் இருக்கக் காணலாம் (சாமி,2005).

இந்து சமுத்திர வர்த்தகத்தில் வர்த்தகப் பண்டங்கள் தொடர்பாக தகவல் பெறவும் கல்வெட்டு ஆதாரங்கள் உதவுகின்றன. உதாரணமாக, பிரன்மலை போன்ற தமிழ் கல்வெட்டுக்களிலும் கி.பி.1240 காலப்பகுதிக்குரிய சிந்தபள்ளி கல்வெட்டிலும் இந்தியாவை மையப்படுத்திய வர்த்தகத்தில் வர்த்தகப் பொருட்கள் தொடர்பாக தகவல் பெற முடிந்துள்ளது (Champakalakshmi, 1996). அதாவது விவசாய உற்பத்திகளான நெல், எள், வெற்றிலை, பாக்கு, உப்பு உட்பட பருத்தி போன்றன பயன்பாட்டில் இருந்துள்ளன. உலோகப் உற்பத்திகளுள் செப்பு, ஈயம், துத்தநாகம், இரும்பு போன்றவற்றையும் வர்த்தகப் பொருட்களுள் உள்ளடக்க முடிகின்றது.

தென்னிந்திய வணிகர்கள் அலெக்சாந்திரியாவுக்கு வர்த்தகப் பயணம் செய்தமை பற்றி அங்குள்ள கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு சென்றோருள் ஒருவர் செங்கடலில் இருந்து நைல் நதிக்குச் செல்லும் வழியில் '*ரெடிசயி*' எனும் கோவிலில் நல்லவிதமாகப் பயணம் செய்ய '*பான்*' கடவுளுக்கு நன்றி கூறி வழிபட்டதாக உள்ளது (சாமி, 2005). அக்கல்வெட்டில் சொகோத்ரா தீவில் அவர்களது குடியிருப்பொன்று இருந்தமை பற்றியும் காணலாம். ஆகவே கல்வெட்டுக்கள் வர்த்தக உறவுகள் தொடர்பாக மட்டுமன்றி வணிகக் குடியேற்றங்கள் தொடர்பாகவும் சான்றாதாரங்களாக உள்ளன.

அத்தோடு கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்படும் சொற்கள் எப்பொருளை அடிப்படையாகக் கொண்டு கையாளப்பட்டுள்ளன என ஆய்வுகளைத் தொடரும் போது, அதன் மூலம் இன்னும் புதிய வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் இனம்காணப்படுகின்றன. உதாரணமாக பல்லவ பாண்டிய காலத்திற்குரிய கல்வெட்டுக்களில் 'சாரிகைக் கொட்டகைகள்' எனும்

பதப்பிரயோகத்தைக் காணலாம். சாரிகைக் கொட்டகைகள் என்பன சுங்கம் அறவிடும் இடங்களாகும் (கோவிந்தசாமி,1992). அதாவது அக்கால வணிகக் குழுவினர் தாம் வர்த்தகத்திற்காக செல்லும் வழிகளில் தங்கிச் செல்ல வசதியாக குறிப்பிட்ட இடைவெளிகளில் தங்குமிடங்களைக் கொண்டிருந்தனர். அதேபோல பெருவெளிகளில் கூடும் இடங்களில் தமது பொருட்களை சேமித்து வைத்துத் தேவைக்கேற்ப எடுத்துச் செல்லுதல் மற்றும் பரிமாறிக் கொள்ளுதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டனர். இவ்வாறாகத் தாம் தங்குமிடங்களிலும் பொருட்களை சேமித்து வைக்கும் இடங்களிலும் காவலுக்கு வீரர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். அதேவேளை பெருவழிகளிலும் எல்லைப் பகுதிகளிலும் ஆற்றைக் கடக்கும் இடங்களிலும் பட்டினப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த சுங்க வரித்தளங்களிலும் வீரர்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

மேலும் காவலுக்கிருந்த இந்த வீரர்கள் இன்னோரன்ன பெயர்களினால் அழைக்கப்பட்டுள்ளனர். முனைவீரர், செட்டிவீரர், கொடிவீரர், எறிவீரர் எனப் பல பெயர்களை கல்வெட்டுக்களில் காண முடிகின்றது. வணிகப் பொருட்களின் முகாமிடங்கள் மற்றும் வணிகர்கள் 'அடிக்கீழ்த்தளங்கள்' என்றும் 'தாவளங்கள்' என்றும் அழைக்கப்பட்டுள்ளனர் (கோவிந்தசாமி,1992).

இந்தியாவின் இன்னோரன்ன பகுதிகளில் இருந்து வந்தும் மேலை நாட்டிலிருந்தும் வந்து தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்குள் செல்லும் வழியில் தகடூர் இருப்பதனால் வர்த்தகம் தொடர்பான பல குறிப்புக்கள் இப்பகுதியில் கிடைக்கப்பெறுகின்றன. இங்குள்ள ஒரு நடுகல்லில் 'வதிசெல்வான் கல்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வர்த்தகப் பெருவழியில் காவல்புரிந்த ஒரு காவல் வீரனது நடுகல்லாக அது அறியப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் திருக்கோவலூர் பெருவழியில் உள்ள கல்வெட்டொன்றில் மன்னர்களான காரி மற்றும் அதியனிடையில் இடம்பெற்ற போரொன்று பற்றியும் அப்போரில் அதியன் பெரும் வெற்றி பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. போரிற்கான காரணமாக வணிகப் பெருவழியொன்றை சொந்தமாக்கிக் கொள்வதற்காக இப்போர் இடம்பெற்றதாகவும் போர் முடிந்து திரும்பும் வேளை அதியன் சமணருக்கு கொடை வழங்கியமை பற்றியும் காணலாம். இதனூடாக ஒரு வணிகப் பாதைக்காக வெளிநாட்டு உறவுகளில் சீர்குலைவுகள் ஏற்படுவதும் நாடுகள் போரிட்டுக் கொள்வதும் குறித்த பகுதிகளில் அக்காலத்தில் வணிகம் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை எடுத்துரைக்கின்றன.

கல்வெட்டுக்களூடாக வணிகக் குழுக்கள் தொடர்பாக தகவல் பெற முடிகின்றது. இவை வணிகர்கள் இணைந்து உருவாக்கிக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களாகும். இந்த வணிகக் குழுக்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டவர்களுள் முன்னோடிகளாக K.V.சுப்ரமண்ய ஐயர், K.R.வெண்கடராம ஐயர், G.S.திக்ஷித், K.இந்திரபாலா போன்றோர் குறிப்பிடத்தக்கோராவர். இவர்களது ஆய்வுகளை முன்னோடிகளாகக் கொண்டு ஆபரஹாம் எனும் ஆய்வாளர், மணிக்கிராமத்தார், ஐனூற்றுவர் எனும் இரு வணிகக் குழுக்கள் தொடர்பாக ஆய்வு செய்துள்ளார் (Karashima, 2002). சோழர் காலக் கல்வெட்டுக்கள் அஞ்சு வண்ணத்தார், மணிக்கிராமத்தார், நானாதேசியர் எனும் குழுவினர் தொடர்பாகக் குறிப்பிடுகின்றன (சங்கரன், 1960). உதாரணமாக நானாதேசியர் பற்றி கல்வெட்டுக்கள் தரும் தகவல்களை எடுத்து நோக்கினால் இக்குழுவானது 1500 அங்கத்தவர்களை உள்ளடக்கி இருந்துள்ளது (கொவிந்தராசனார்,2004). இந்தோனேஷியா, சயாம், மைசூர் எனும் இடங்களிலும் கிடைக்கப்பெறும் கல்வெட்டுக்களில் இவர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. பர்மாவில் இவர்களால் கட்டப்பட்ட கோவிலொன்று பற்றியும் அங்குள்ள கல்வெட்டுக்களில் காணலாம். இவர்கள் சென்று வர்த்தகம் செய்த நாடுகள், பொருட்கள், எனப் பல விடயங்களை மைசூரில் உள்ள கல்வெட்டு கூறுகின்றது. இவ்வாறாக கடல்கடந்து விரிந்திருந்த இக்குழுவினரது வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாகவும் அங்கு செய்த அறப்பணிகள் தொடர்பாகவும் அறியலாம்.

இடத்திற்கு இடம் போய் வர்த்தகம் செய்யும் வர்த்தகக் குழுக்களது தென்கிழக்காசிய மற்றும் இலங்கையுடனான வர்த்தக நடவடிக்கைகள் பற்றி பல்லவ ஆவணங்களில் கி.பி.9ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் மட்டும் அறிய முடிகின்றது. அவ்வாறு பல்லவ கல்வெட்டுக்களில் அறிய முடியுமான ஒரேயொரு வர்த்தகக் குழுவினராக மணிக்கிராமத்தார் இருப்பதுடன் இவர்கள் தொடர்பாக தென்கிழக்காசியாவில் 'தகுவா பா' எனும் கல்வெட்டிலும் காணலாம் (Takua Pa on the Isthmus of Kra in South Asia) (Champakalakshmi, 1996). இவ்வாறு கல்வெட்டுக்கள் ஒவ்வொருவர்த்தகக் குழுவினர் தொடர்பான வரலாற்றையும் பல்துறை சார்ந்து ஆய்வு செய்ய வழிசெய்கின்றன.

தருமபுரியில் கண்டெடுக்கப்பட்ட மற்றொரு கல்வெட்டு வணிகக் குழுக்களான வளஞ்சியர், ஐநூற்றுவர் என்போர் அம்பலம் (கோவில் அல்லது மண்டபம்) ஒன்றைக் கட்டியமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது (கோவிந்தராசனார்,2004). வணிகக் குழுக்கள் தொடர்பாக தகவல் தருவதில் கல்வெட்டுக்கள் முன்னணி வகிக்கின்றன.

## 5. முடிவுரை

இவ்வாறாக நோக்கும் போது நாணயங்களும் கல்வெட்டுக்களும் வர்த்தக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்குவகிக்கின்றமை தெளிவாகின்றது. இந்து சமுத்திர வர்த்தகத்தை கருதும் போது அது தொடர்பாக புராதன நாகரிகக் காலம் முதலாகவே எமக்கு கல்வெட்டு உள்ளிட்ட தொல்பொருள் மூலாதாரங்களூடாக வர்த்தகத் தகவல்களை பெற முடிகின்றது. அவ்வகையில் புராதன நாகரிகங்களுள் குறிப்பாக ஹரப்பா, மெசொபொதேமிய நாகரிகங்கள் மற்றும் அதற்குப் பிற்பட்ட கால அரசுகள், பேரரசுகள் என இந்து சமுத்திரத்தை சூழவுள்ள அரசுகளின் வர்த்தக வரலாறானது நிலத்தடியிலும் நீரடியிலும் விரவியுள்ளன.

அவற்றைத் தேடும் போது கல்வெட்டுக்களும் நாணயங்களும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றூடாகக் கட்டியெழுப்ப முடியுமான வர்த்தக வரலாறென நோக்கும் போது பின்வருவனவற்றை சுருக்கமாக முன்வைக்கலாம். அவ்வகையில் நாணயங்களூடாக வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நாடுகள், அவற்றிடையான உறவுகளது நிலைப்பேற்றுத் தன்மை, நாடுகளது பொருளாதார வளம், வர்த்தக செழிப்பு அல்லது மந்தகதியான காலங்களில் ஒவ்வொரு பகுதியையும் ஆட்சி செய்த மன்னர் விபரம், முக்கியமான வர்த்தக பண்டங்கள், அவை ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட விபரம், ஒவ்வொரு பகுதிக்கும் என தனித்துவத்துடனிருந்த வர்த்தகப் பொருட்கள், வர்த்தகக் குடியேற்றங்கள், வர்த்தகம் இடம்பெற்ற மார்க்கங்கள் போன்ற பல்வேறு தகவல்களை பெறமுடிகின்றது. அவ்வாறே இலக்கியங்களில் வர்த்தகம் தொடர்பாகக் கூறப்படும் தகவல்களை எமக்கு உறுதிப்படுத்திக்கொள்ளவும் முடிகின்றது.

நாணயங்களைப் போன்றே கல்வெட்டுக்களும் சமகாலத்தில் நிலவிய வர்த்தக சட்டவொழுங்குகள், வரிவிதிப்பு தொடர்பான விபரங்கள், சந்தைகளது நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள், வர்த்தகர்கள் வகித்த முக்கிய பதவிகள், பொறுப்புக்கள் என்பன பற்றியும் வர்த்தகப் பண்டங்களது உற்பத்தி நிலையங்களது விபரம், துறைமுகங்கள், துறைமுக நகர்களது பண்டையப் பெயர்கள், வர்த்தகப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட துறைமுகங்கள், வர்த்தகர்களது அறம்சார்ந்த செயற்பாடுகள், வர்த்தகத்தில் பயன்படுத்தப்பட்ட விஷேட சொற்பிரயோகங்கள், வர்த்தகக் குழுவினர், அவர்களது வர்த்தக செயற்பாடுகளது மாதிரி, வர்த்தகக் குழுவினர் ஒவ்வொருவரும் செல்வாக்குப் பெற்றிருந்த வர்த்தகத் துறைகள், வர்த்தக இலாபம் கருதி அக்கால அரசர்களால் முன்னெடுக்கப்பட்ட போர்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களை கல்வெட்டுக்கள் தருகின்றன.

எனவே வர்த்தக வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் நாணயங்கள், கல்வெட்டுக்கள் எனுமிரு தொல்பொருள் மூலாதார வகைகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன எனலாம். ஏனைய தொல்பொருள் மூலாதாரங்களுடன் இவற்றை வர்த்தக வரலாற்றைக் கட்டியெழுப்புதலுடன் ஒப்பிட்டு நோக்கும் போது ஏனைய தொல்பொருள் மூலாதாரங்களிலும் பார்க்க இவை அதிக செல்வாக்குடையனவாக விளங்குகின்றன.

## உசாத்துணைகள்

கனகசபை,வி.(1956). ஆயிரத்தெண்ணூறு ஆண்டகளுக்கு முற்பட்ட தமிழகம், (மொ.பெ) கா.அப்பாதுரை, திருநெல்வேலி: திருவெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடட்.

கோசாம்பி,டி.டி.(2011). இந்தியா வரலாறு - ஓர் அறிமுகம், (மொ.பெ) சிங்கராயர், கோவை: விடியல் பதிப்பகம்.

கோவிந்தசாமி,மு.(1992). தமிழர் இன வரலாறு, வாசுகி பதிப்பகம்.

கோவிந்தராசனார்,சி. தெய்வநாயகம், சி.கோ. (2004). சோழர் வரலாறு, அன்னம் தஞ்சாவூர்.

சங்கரன், எஸ். (1960). இந்திய நாகரிகம், மல்லிகைப் பதிப்பகம்.

சாமி,ஆர்.என். (2005). 3000 ஆண்டுகள் தமிழனின் கடல்வழி வணிகம், எமரல்ட் பதிப்பகம்.

தசநாயக்க, ரோஹித. (2021). (மொ.பெ) ஹாஸிம் பாத்திமா பிர்தௌஸியா, இளம் பிறையும் எடைத் தராசும், இலங்கை: குமரன் புத்தக இல்லம்.

வேங்கடசாமி,மயிலை சீனி. (1978). கொங்கு நாட்டு வரலாறு: பழங்காலம் முதல் கி.பி.250 வரை, சென்னை:நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.

ஸ்டுவர்ட் பிகற். (1970). வரலாற்றிற்கு முற்பட்ட இந்தியா, இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

Champakalakshmi, R. (1996). Trade, Ideology and Urbanization: South India 300 BC to AD 1300, Oxford University Press.

Karashima, Noboru. (2002). (Ed.).Ancient and Medieval Commercial Activities in the Indian Ocean: Ceramic-sherds, Japan: Taisho University.

Pushparatnam, P. (2002). Ancient Coins of Sri Lankan Tamil Rulers, Jaffna: Bavani Patippaham.

Silva, KM.de. (1997). A History of Sri Lanka, New Delhi: Oxford University Press.